# புகழ்ச்சிக் கூட்ட நற்செய்தி

2019 ஆவணி மாதம் 26ம் திகதி தொடக்கம் 31ம் திகதி வரை

## *“அவரே என் கேடயம்”*

01. ஆரம்பப் புகழ்ச்சி
புபுது பாடல் இல 38 “தூய ஆவியானவரே….”

02. புகழ்ச்சிக்கான அறிமுகம் திருப்பாடல் 18:2
“ஆண்டவர் என் கற்பாறை: என் கோட்டை: என் மீட்பர்: என் இறைவன் நான் புகலிடம் தேடும் மலை: அவரே என் கேடயம் எனக்கு மீட்பளிக்கும் வல்லமை என் அரண்”
எல்லா உலகையும் படைத்து ஆளும் மகோன்னத இறைவனை “அப்பா தந்தையே! அப்பா அன்னையே” என்று சொல்வதற்கு பேறுபெற்றுள்ள நீங்களும் நானும் உங்களது எனது வாழ்வில் எமது துணையும் கேடயமும் புகலிடமுமான மகோன்னத இறைவனை அனுபவமாக்கிக் கொண்டுள்ளோமா? எமது துன்பத்தில் வேதனையில் ஆதரவற்ற நிலையில் எம்மை மீட்கக்கூடிய விடுதலையாக்கக்கூடிய எமது சக்தி பலம் எமது மீட்பரான அப்பா தந்தை அப்பா அன்னையே ஆவார். நாம் அவருக்கு நன்றி கூறுவோம். புகழ்வோம்.
புபுது பாடல் இல 247 “கேடய துணிவளித்து….”

03. நாளுக்குரிய நற்செய்தி உரோமர் 8: 1-2
**“ஆகவே கிறிஸ்து இயேசுவோடு இணைந்திருப்போருக்கு இனித் தண்டனைத் தீர்ப்பே கிடையாது. ஏனெனில் கிறிஸ்து இயேசுவோடு இணைந்திருப்போருக்கு வாழ்வு தரும் தூயஆவியின் சட்டம், பாவம், சாவு என்பவற்றுக்கு உள்ளாக்கும் சட்டத்தினின்று என்னை விடுவித்து விட்டது”**

- இவ்வேதாகமப் பகுதியை தனிமையாக மீண்டும் வாசிக்கவும்.

- புனித பவுலடிகளார் உரோமை சங்கத்திற்கு எழுதியுள்ள இக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ள இம்மாபெரும் நற்செய்திக்கு செவிமடுக்கையில் உங்களுக்கு ஏற்பட்ட உணர்வு அனுபவம் என்ன? அருகிலிருப்பவருடன் பகிர்ந்து கொள்ளவும்.

- நாம் எமது அவதானத்தை முதல் வசனத்திற்கு செலுத்தினால்:
  பாவம் மனிதனை தோல்வி அடைந்தவனாக பலவீனனாக மாற்றுகையில் இறைவன் மனிதனால் வெற்றி காண முடியாத நிலைகளை தமது மகனானவரின் வாழ்க்கை பலியின் வழியாக தோற்கடித்தார். கிறிஸ்துநாதர் மனித உருவெடுத்து பரிசுத்த ஆவியானவரை தமது ஆசானாக, ஏற்று பரிசுத்த ஆவியானவரின் வழிகாட்டலுக்கு அடிபனிந்தவாறு வாழ்ந்தார். பரிசுத்த ஆவியானவருக்கு நிரந்தரமும் செவிமடுத்து, கீழ்படிந்தார். பாவத்தின், மரணத்தின் பிடியில் அகப்பட்டு இருந்த மனிதனை அதிலிருந்து மீட்பதற்காக (பாடுபட்டார்) போராடினார். பரிசுத்த ஆவியானவரினால் (இறைஅன்பினால்) நிரம்பியவாறு முழு வாழ்வையும் கழித்த இயேசு ஆண்டவர் தமது கொடூரமான துன்ப வேதனையின் கால கட்டம் (பாடுகள்) முழுவதும் பாவத்திற்கு அடிமையாகாமல் தூயஆவியானவருக்கு இடமளித்த வாழ்வினில் பிரதிபலனாக மரணத்தை வெற்றி கொண்டு உயிர்ப்பினை உரிமையாக்கிக் கொண்டார். அவ்விடத்திலேயே நின்று விடாது அவரை வெற்றியை நோக்கி வழிநடத்திய தூயஆவியானவரை எமக்குப் பரிசாக்கித் தந்தார். அத் தூயஆவியானவருள்

நாம் வாழும் அளவிலேயே பாவத்தின் மரணத்தின் விளைவுகளை தோற்கடித்தவாறு வெற்றியை நோக்கிப் பயணம் செயவதற்கு எமக்குக் கதவைத் திறந்து தந்துள்ளார்.

04. எம் பக்கம்

- அன்று உரோமை சங்கத்திற்கு புனித பவுலடிகளார் வெளிப்படுத்திய இம் மாபெரும் நற்செய்தி இன்று உங்களுக்கும் எனக்கும் நற்செய்தியாகும், அதுபோலவே சவாலாகும்.
- உங்களதும் எனதும் பலவீனம் குறைபாடுகளினூடாக பாவத்தில் விழும் நீங்களும் நானும், எங்களுக்கு அவரது நீதி நிறைவேற வேண்டுமாயின் நாமும் கிறிஸ்துவுக்குள் வாழ வேண்டும்.
- எமது வாழ்வின் முறை வாழ்வின் பிரதிச்செயல் எங்கள் செய்பாட்டில் தூயஆவியானவருக்கு விழிப்புற்றவாறு அவருக்குள் வாழுகின்ற அளவிற்கு எமக்கும் வெற்றியை நோக்கி பயணிக்க முடியும். நாம் நமக்கே விழிப்புற்றவாறு அவர் பக்கம் திரும்புவோம்.

05. இறுதிப் புகழச்சி

இயேசு ஆண்டவரைப் போல் தூயஆவியானருள் வாழ்வதற்கு வல்லமை எக்குக் கிடைக்குமாறு வேண்டியவாறு அருகிலிருப்பவரை ஸ்பரிசித்தவாறு செபிக்கவும்.

புபுது பாடல் இல 365 தூயஆவியில் நிரம்புவோம்……